# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education – Northern Province

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) நிலையறி பரீட்சை - 2021**
**General Certificate of Education (Adv – Level) Diagnostic Examination – 2021**

| | | |
|---|---|---|
| தரம் :- 13 (2021)<br>Grade :- 13 (2021) | புவியியல் I<br>Geography I | நேரம் :- 3 மணித்தியாலம்<br>Time :- Three hours |
| சுட்டெண்:.............................. | 22 | T | I | மேலதிக வாசிப்பு நேரம் :-<br>10 நிமிடம் |

**வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

***அறிவுறுத்தல்கள்:***

- இவ் வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டது. **பகுதி I, 40** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. **பகுதி I** இற்கான விடைகள் **இவ் வினாத்தாளிலேயே** எழுதப்பட வேண்டும்.
- **பகுதி I** இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் **ஒரு** புள்ளி வீதம் உரித்தாகும்
- **பகுதி II** இல் உள்ள **இரண்டு** வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- **பகுதி III** இல் **நான்கு** வினாக்கள் தரப்பட்டுள்ளன அவற்றுள் **இரண்டு** வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- **பகுதி I, பகுதி II, பகுதி III,** ஆகியவற்றுக்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப்பட வேண்டும்

### பகுதி I

- ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து அதற்குரிய **இலக்கத்தினை** எதிரே உள்ள **புள்ளிக்கோட்டில்** எழுதுக.

1. புவியியலில் எண்ணாலான தரவுகள் மற்றும் தகவல்களை இலகுவாக விளங்கிக் கொள்ளும் வகையில் காட்டுவதற்கு பயன்படுத்தப்படும் நுட்பமுறை எது?
   (1) வரைபுகள் (2) ஒளிப்படம் (3) படிமங்கள்
   (4) இடவிளக்கப்படம் (5) கருப்பொருள்படம் (…..)

2. பெரிய அளவுத்திட்டத்தில் வரையப்பட்ட படம் ஒன்றிற்கு பொருத்தமாக அமையும் கூற்று
   (1) பாரிய நிலப் பகுதியைக் காட்டக் கூடியதாக இருத்தல்.
   (2) 1:100,000 அளவுத்திட்டத்தில் அமைக்கப்பட்டதாக உள்ளமை.
   (3) இப் படங்கள் வாசிப்பதற்குக் கடினமாக இருக்கும்.
   (4) சிறிய நிலப்பகுதியில் அதிகளவு தகவல்களை தெளிவாகக் காட்டலாம்.
   (5) குறிப்பிட்டளவு தகவல்களை படத்தில் உள்ளடக்கக் கூடியதாக இருத்தல்.
   (…..)

3. காவித் தரவு மாதிரியில் புள்ளிகள், கோடுகள், பல்கோணிகள் மூலம் காட்டக் கூடிய புவியியல் அம்சங்களை முறையே கொண்டிருப்பது எது?
   (1) கிணறு, கால்வாய், பயிர்நிலம்
   (2) கட்டடம், நீர்த்தேக்கம், நதி
   (3) கிணறு, வீதி, கால்வாய்.
   (4) குளம், கிணறு, வீதி
   (5) கிணறு, வீதி, நதி.

(…..)

4. 1:50,000 இடவிளக்கப்படம் ஒன்றில் 10 மில்லிமீற்றர் நீளமும் 10 மில்லிமீற்றர் அகலமும் கொண்ட ஓர் வீட்டுத் தோட்டத்தின் பரப்பளவு எவ்வளவு?
   (1) 1 சதுரகிலோமீற்றர்.
   (2) 0.25 சதுரகிலோமீற்றர்.
   (3) 100 சதுரகிலோமீற்றர்.
   (4) 25 சதுரகிலோமீற்றர்.
   (5) 0.50 சதுரகிலோமீற்றர்.

(…..)

5. தொலையுணர்வு மேடைகளில் ஒன்றான விண்வெளியில் தாழ் உயரச் செய்மதிகள் (Low Altitude Satellite) அமைவு பெற்றுள்ள உயரம்
   (1) 250 km —300km
   (2) 300 km —400km
   (3) 700 km —1500km
   (4) 1500 km —3600km
   (5) 3600km வரை

(…..)

6. இலங்கையில் 1:50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த 92 படத்தாள்களில் எவ் இலக்கப் படத்தாள்கள் ஒன்றிணைக்கப்பட்டு அச்சிடப்பட்டுள்ளது.
   (1) 1 உம் 2 உம்
   (2) 68 உம் 69 உம்
   (3) 91 உம் 92 உம்
   (4) 50 உம் 51 உம்
   (5) 71 உம் 72 உம்

(…..)

7. இடவிளக்கப்படங்களில் உள்ள புவியியல் வேறுபாட்டு அம்சம், நீர் வடிகால் அம்சம், கலாச்சார அம்சம் என்பவற்றை முறையே சரியாகக் காட்டும் விடை.
   (1) பௌத்தவிகாரை, மியாந்தர் வளைவு , பாடசாலை
   (2) மென்சாய்வு, நீர்வீழ்ச்சி, வைத்தியசாலை.
   (3) கூம்புக்குன்று, பின்னியஆறு, இந்துக்கோவில்
   (4) மேட்டுநிலம். தீவு, பள்ளிவாசல்
   (5) பள்ளத்தாக்கு, கிளை ஆறு, கணவாய்

(…..)

8. புள்ளிவிபரவியலின் பிரிக்கை அளவீடுகளில் ஒன்றான இரண்டாம் காலணை என்பது மையநாட்ட அளவீட்டில் எவ்வாறு அழைக்கப்படும்.
   (1) இடை
   (2) ஆகாரம்
   (3) இடையம்
   (4) கீழ்காலணை
   (5) சராசரி

(…..)

9. இடக்கணியப்படம் ஒன்றினை அமைப்பதற்கு மிகவும் பொருத்தமான தரவு வகையாக அமைவது எது?

(1) கூட்டமாக்கப்படாத தரவு
(2) கூட்டமாக்கப்பட்ட தரவு
(3) பச்சைத் தரவு
(4) பண்புத் தரவு
(5) தொடர் தரவு

(…..)

10. பின்வருவனவற்றுள் மீடிறன் பல்கோணி ஒன்றினை அமைக்கும் முறை தொடர்பாக அமையும் **தவறான** கூற்று யாது?

(1) நிரல்களின் நடுப்புள்ளிகளை கோட்டினால் இணைத்தல் வேண்டும்.
(2) ஆரம்ப மற்றும் முடிவுப் புள்ளியானது கிடையச்சுடன் இணைந்திருத்தல் வேண்டும்.
(3) இழைவரையத்தின் தொடக்கத்தில் நிரலின் அரைவாசியின் அளவில் கிடையச்சில் ஆரம்பிக்கும்.
(4) இழைவரையத்தின் முடிவில் நிரலின் அரைப் பகுதி வெளியாக அமைந்திருக்கும்.
(5) ஆரம்ப மற்றும் முடிவுப் புள்ளியானது நிரல்களுடன் இணைந்திருத்தல் வேண்டும்.

(…..)

11. உலகில் தோன்றிய நிலவுருவங்களின் பருமனின் அடிப்படையிலான வகைப்பாட்டில் ஒன்றான இரண்டாம் வகை நிலவுருவங்களை மட்டும் உள்ளடக்கி இருப்பது.

(1) கண்டத்திணிவுகள், சமுத்திர அகழி, தீப்பாறைகள்,
(2) தீப்பாறைகள், மலைத்தொடர்கள், சமுத்திர அகழி
(3) V வடிவப்பள்ளத்தாக்கு, U வடிவப்பள்ளத்தாக்கு, நீர்வீழ்ச்சிகள்
(4) கண்டத்திணிவுகள், V வடிவப்பள்ளத்தாக்கு, தீப்பாறைகள்
(5) கண்டத்திணிவுகள், U வடிவப்பள்ளத்தாக்கு, நீர்வீழ்ச்சிகள்.

(…..)

12. வளிமண்டலக் கட்டமைப்பின் சேர்க்கையில் நிரந்தரமான வாயு,மற்றும் மாறுபடும் வாயு என்பனவற்றை முறையே கொண்டமைந்துள்ள விடை எது?

(1) நைதரசன், காபனீரொட்சைட்,
(2) ஆர்கன், மெதேன்
(3) நைதரசன், ஒட்சிசன்
(4) காபனீரொட்சைட், கிரிப்ரன்
(5) நைதரசன், ஓசோன்

(…..)

13. புவியின் உட்பகுதி தொடர்பில் காணப்படும் பண்புகளுள் ஒன்றாக **அமையாதது** எது?

(1) புவியின் உட்பகுதி நோக்கிச் செல்லும்போது வெப்பநிலை அதிகரிக்கின்றது.
(2) புவியின் உட்பகுதிக்குச் செல்லும் போது அமுக்கம் அதிகரிக்கின்றது.
(3) புவியின் வெளிமையத்தினுள் பாறைகள் பாகுவடிவில் காணப்படுகின்றது.
(4) புவியின் உள்மையம் திண்மநிலையில் காணப்படுகின்றது.
(5) புவியின் மையத்தின் வெப்பநிலை $60000^0$ C விட அதிகமாகும்.

(…..)

14. மூன்றாம் காலத்துக்குரிய உருமாற்றமடைந்த மயோசின் சுண்ணாம்புக்கற் படிவகள் காணப்படும் பிரதேசம்

(1) தப்போவ
(2) புளுத்தோட்டை
(3) பள்ளம
(4) அகுறுகடுவ
(5) ரக்வான

(…..)

15.உலகில் எரிமலைச் செயற்பாட்டினால் தோற்றம் பெற்ற தலையீட்டுத்தீப்பாறை நிலவுருவங்களை மட்டும் உள்ளடக்கியுள்ள விடை.

(1) வில்லைத் தீப்பாறை, கிடைத்தீப்பாறை, குமிழ் தீப்பாறை, லாவாக்கூம்பு

(2) கூட்டெரிமலை, குழிவுத்தீப்பாறை, சாம்பல் கூம்பு, குத்துத்தீப்பாறை.

(3) வில்லைத் தீப்பாறை, எரிமலைத்தூபி, சாம்பல் கூம்பு, லாவாக்கூம்பு

(4) வில்லைத் தீப்பாறை, சீதர்மரத்தீப்பாறை, குழிவுத்தீப்பாறை, ஆட்பிளவுக்கற்குகை.

(5) குமிழ் தீப்பாறை, எரிமலைத்தூபி, குத்துத்தீப்பாறை, கூட்டெரிமலை.

(…..)

16.புறவிசைத் தொழிற்பாடுகளுள் ஒன்றான மலைப் பனிக்கட்டி ஆற்றின் செயற்பாட்டினால் தோற்றம் பெற்ற அரித்தல் நிலவுருவங்களை மட்டும் கொண்டமைந்திருப்பது.

(1) வட்டக்குகை, கூம்பகச்சிகரம், நீள்குன்றுகள், படிவுத்திட்டைகள்.

(2) வட்டக்குகை, கூர்நுனிஉச்சி, கூம்பகச்சிகரம், தொங்குபள்ளத்தாக்கு.

(3) தொங்குபள்ளத்தாக்கு, வட்டக்குகை ஏரி, படிவுத்திட்டைகள், எசுக்கர்

(4) நீள்குன்றுகள், படிவுத்திட்டைகள். கூர்நுனிஉச்சி, எசுக்கர்

(5) வட்டக்குகை, கூம்பகச்சிகரம், எசுக்கர், தொங்குபள்ளத்தாக்கு.

(…..)

17.உலகின் பிரதான காற்றுத் தொகுதிகளில் மூன்றாம் நிலைச் சுற்றோட்டத்தில் உள்ளடங்கும் காற்றுக்கள் எவை?

(1) வியாபாரக்காற்று, மேலைக்காற்று, முனைவுக்காற்று

(2) சூறாவளிகள், முரண்சூறாவளிகள், முனைவுக்காற்று

(3) பருவக்காற்று, பள்ளத்தாக்குக்காற்று, தரைக்காற்று

(4) வியாபாரக்காற்று, சூறாவளிகள், பருவக்காற்று,

(5) பருவக்காற்று, கடல்காற்று, சூறாவளிகள்

(…..)

18.இலங்கையில் இரண்டாவது மேற்காவுகைச் சுற்றோட்டம் இடம்பெறும் காலப்பகுதி எது?

(1) மார்ச் - ஏப்ரல் (2) மே – செப்ரெம்பர்

(3) ஒக்டோபர் - நவம்பர் (4) டிசம்பர் - பெப்ரவரி

(5) ஒக்டோபர் - டிசம்பர்

(…..)

19.இலங்கை எத்தனையாம் ஆண்டு காலநிலை மாற்றம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் திட்டமிடப்பட்ட உடன்படிக்கையின் பங்குதாரரானது.

(1) 1993 ஆம் ஆண்டு (2) 1992 ஆம் ஆண்டு

(3) 1972 ஆம் ஆண்டு (4) 1987 ஆம் ஆண்டு

(5) 2010 ஆம் ஆண்டு (…..)

20.அதிகளவு நீரை வீண்விரயமாக்காததும், 3246 சதுர கிலோமீற்றரை நீரேந்து பிரதேசமாகக் கொண்டதுமான இலங்கையின் இரண்டாவது பெரிய நதி எது?

(1) களனிகங்கை (2) களுகங்கை

(3) மகாவலிகங்கை (4) மல்வத்து ஓயா

(5) கலா ஓயா (…..)

21.உலகில் காணப்படுகின்ற இடைவெப்பவலய புல்நிலங்களை மட்டும் சரியாகக் கொண்டமைந்த விடை

(1) சவன்னா, கம்போஸ், லானோஸ் (2) கம்போஸ், ஸ்ரெப்ஸ், பிறேயறிஸ்

(3) சவன்னா, கம்போஸ், ஸ்ரெப்ஸ், (4) பம்பாஸ், டவுண்ஸ், கம்போஸ்

(5) பம்பாஸ், டவுண்ஸ், வெல்ட்

(…..)

22.இலங்கையில் சூழல் தொகுதிகளை பாதுகாப்பதற்காக எந்த சட்ட மூலத்தின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகாரசபை நிறுவப்பட்டது.

(1) 1980 தேசிய சுற்றாடல் சட்டம் (2) 1988 தேசிய மரபுரிமைகள் வனநிலச்சட்டம்.

(3) 1907 ஆண்டு 16ஆம் இலக்க வனச்சட்டம் (4) 1995ஆண்டு 25ஆம் இலக்க வனச்சட்டம்.

(5) 1937 வனவிலங்கு மற்றும் தாவரங்கள் பாதுகாப்புச் சட்டம்.

(…..)

23.உலகில் அதிகளவில் சுனாமி தோற்றம் பெறுவதற்கு ஏதுவாக அமைந்த காரணி எது?

(1) கடலுக்கு அடியில் ஏற்படும் எரிமலைவெடிப்பு (2) கடலின்மீது எரிகற்கள் உடைந்து வீழ்தல்

(3) கடலில் அணுகுண்டுப் பரிசோதனை (4) கடலில் ஏற்படும் சூறாவளி

(5) கடலுக்கடியில் ஏற்படும் புவியதிர்வு

(…..)

24.இயற்கையைப் பாதுகாப்பதற்கான சர்வதேச சங்கம் என்ற சூழலியல் அமைப்பின் ஆங்கில சுருக்கக் குறியீட்டை சரியாகக் காட்டுவது.

(1) UNEP (2) IUCN

(3) UNFCC (4) SACEP

(5) SAARC

(…..)

25.அனர்த்த முகாமைத்துவ தேசிய சபையின் உப தலைவராக பதவி வகிக்க தகுதி உடையவர்கள்.

(1) பிரதமர், முதலமைச்சர் (2) எதிர்க்கட்சித்தலைவர், முதலமைச்சர்

(3) பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் (4) முதலமைச்சர், ஜனாதிபதி

(5) ஜனாதிபதி, பிரதமர்

(…..)

26.உலகிலே 2014ஆம் ஆண்டுத் தரவின் படி பருமட்டான பிறப்பு வீதம் (1000 க்கு) மிகக் குறைவாக உள்ள அபிவிருத்தி அடைந்த நாடு எது?

(1) ஐக்கிய அமெரிக்கா (2) யப்பான்

(3) ஜேர்மனி (4) நைகர்

(5) தென்கொரியா

(…..)

27.இலங்கையில் இருந்து வெளிநாடுகளுக்கு இடம்பெயர்ந்தோர் அதிகளவில் வசிக்கும் நாடு

(1) கனடா (2) அவுஸ்திரேலியா

(3) ஜேர்மனி (4) பிரித்தானியா

(5) மத்திய கிழக்கு நாடு

(…..)

28.நகரக் குடியிருப்பு ஒன்றில் காணக்கூடிய விசேட பண்புகளை மட்டும் கொண்டமைந்திருப்பது.

(1) சனத்தொகை அதிகம், முதல் நிலைப் பொருளாதாரம், அதிகளவு உயர்ந்த மாடிக்கட்டடங்கள்.

(2) சனத்தொகை அடர்த்தி குறைவு, இரண்டாம்நிலைப் பொருளாதாரம், போக்குவரத்து அதிகம்.

(3) சனத்தொகை அடர்த்தி அதிகம், மூன்றாம் நிலைப் பொருளாதாரம, குடியிருப்புக்கள் குறைவு.

(4) சனத்தொகை குறைவு, விவசாயப் பொருளாதாரம், போக்குவரத்து குறைவு

(5) சனத்தொகை அடர்த்தி அதிகம், இரண்டாம்நிலைப் பொருளாதாரம், நிர்மாணிப்புக்கள் அதிகம்

(…..)

29.“ப்ளூ பனானா, கோல்டன் பனானா, கிறீன் பனானா” என்பன நகரமயமாக்கல் எல்லையைத் தாண்டி பரவலடைந்த நகரமயமாக்கல் வலயங்களாகும் இவை காணப்படும் கண்டம் எது?

(1) ஆசியா
(2) ஐரோப்பா
(3) வட அமெரிக்கா
(4) தென் அமெரிக்கா
(5) அவுஸ்திரேலியா

(…..)

30.இலங்கையின் நகர செயற்பாட்டு வகைக்கு ஏற்ப வதிவிட நகரங்களுக்கான எடுத்துக்காட்டாக அமைவன.

(1) பிலியன்தல, கடுவெல
(2) கடுவெல, கதிர்காமம்
(3) கண்டி, அநுராதபுரம்
(4) நல்லூர், கதிர்காமம்
(5) ஸ்ரீ ஜயவர்த்தனபுரக் கோட்டை, பிலியன்தல

(…..)

31.இலங்கையில் குறைந்த நகரமயமாக்கல் மட்டத்தைக் கொண்ட மாவட்டங்களை மட்டும் குறிப்பது.

(1) ஹம்பகா, யாழ்ப்பாணம்
(2) அநுராதபுரம், பொலநறுவை
(3) குருநாகல், கேகாலை
(4) மாத்தறை, அம்பாந்தோட்டை
(5) புத்தளம், கேகாலை

(…..)

32. சர்வதேச நெல் ஆராய்ச்சி நிலையம் அமைந்துள்ள நாடு பின்வருவனவற்றுள் எது?

(1) பேரு
(2) இலங்கை
(3) அவுஸ்திரேலியா
(4) டென்மார்க்
(5) பிலிப்பைன்ஸ்

(…..)

**33.**இலங்கையில் விசேட பொருளாதார மத்திய நிலையங்கள் நிறுவப்பட்டமைக்கான காரணங்களுள் ஒன்றாக **அமையாதது.**

(1) இடைத்தரகர்கள் விவசாய உற்பத்தியை விற்பனை செய்வதை ஊக்குவித்தல்

(2) விவசாய உற்பத்திக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுத்தல்

(3) விவசாயிகள் நேரடியாக வியாபாரிக்கு விற்பனை செய்து அதிக இலாபத்தைப் பெறுதல்

(4) நுகர்வோர் நியாயமான விலையில் விவசாயப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளல்

(5) விவசாயிகளின் உற்பத்தியை இடைத்தரகர் மூலம் விற்பனை செய்வதைத் தவிர்த்தல்.

(…..)

34.1980 அளவில் எந்த விவசாய தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் ''சர்வதேச விவசாயஆராய்ச்சி தொடர்பான ஆலோசனை சபை ஆரம்பிக்கப்பட்டது.

(1) மரபணுத்தொழில்நுட்பம் (2) சேதனவிவசாயம்
(3) நீர்ப்பாசனத் தொழில்நுட்பம் (4) பசுமைப்புரட்சி தொழில்நுட்பம்
(5) நவீன இயந்திரத்தொழில்நுட்பம்

(…..)

35.உலகிலே மேற்பரப்பு அகழ்வின் மூலம் பெற்றுக் கொள்ளும் கனியங்களுள் ஒன்றாக அமைவது.

(1) நிலக்கரி (2) தங்கம்
(3) இரும்புத்தாது (4) கருங்கல்
(5) கனியநெய்

(…..)

36.இலங்கையில் உள்ள கனிய மணலில் அதிகளவில் அடங்கியுள்ள கனியம் எது,

(1) இல்மனைற் (2) ரூட்டைல்
(3) சர்கோன் (4) சிலிமனைட்
(5) மொனசைட்

(…..)

37. இலங்கைக்கு அதிகளவு அந்நியச் செலவாணியைப் பெற்றுக் கொடுக்கும் பிரதான ஏற்றுமதிக் கைத்தொழில் எது?

(1) சீமேந்துக் கைத்தொழில் (2) சீனிக் கைத்தொழில்
(3) ஆடைக் கைத்தொழில் (4) பாரம்பரிய கைவினைக் கைத்தொழில்
(5) இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் கைத்தொழில்

(…..)

38. இலங்கைக்கு அதிகளவு சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதன் நோக்கம் பின்வருவனவற்றுள் ஏது?

(1) மதம் மற்றும் கலாசாரம் (2) ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு
(3) வர்தகநடவடிக்கை (4) உறவினர்களைச் சந்தித்தல்
(5) விளையாட்டு

(…..)

39.பூகோளமயமாக்கலினால் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர்நோக்கும் சவால்களில் ஒன்றாக அமைவது

(1) நேரடி வெளிநாட்டு முதலீடுகள் கிடைக்கப்பெறுதல்
(2) உலகளாவிய ரீதியில் கல்வி வாய்ப்புக்கள் பெற்றுக் கொள்ளல்
(3) தொழில்நுட்பஅறிவு இலகுவாக கிடைக்கப்பெறல்
(4) பாரம்பரிய கலாச்சாரப் பண்புகள் மாற்றமடைதல்
(5) பல்தேசியக் கம்பனியால் வேலைவாய்ப்பு கிடைக்கப்பெறுதல்

(…..)

40.தெற்காசிய நாடுகளின் பிராந்திய ஒத்துழைப்புக்கான அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள நகரம்.

(1) மணிலா (2) கத்மண்டு
(3) டாக்கா (4) ஜெனிவா
(5) புதுடில்லி (…..)

(40X1=40 புள்ளிகள்)

## பகுதி II

(1) இலங்கை நில அளவைத்திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50,000 அளவுத்திட்டத்திலமைந்த **கெகிராவை** இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அதில் சமவுயரக்கோடுகளின் இடைவெளி **20மீற்றர்களால்** காட்டப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

i. இவ் இடவிளக்கப்படத்தில் A-B மற்றும் C-D கோடுகளினால் குறித்துக் காட்டப்பட்டுள்ள புவியியல் வேறுபாட்டு அம்சங்களை முறையே பெயரிடுக? (2 புள்ளிகள்)

ii. இவ் இடவிளக்கப்படத்தில் இலக்கம் 2 சதுரத்தினுள் இனங் காணக்கூடிய **இரண்டு** பௌதீக அம்சங்கள், **இரண்டு** பண்பாட்டு அம்சங்களினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

iii. (a) இடவிளக்கப்படத்தில் சதுரம் 3 இனால் காட்டப்பட்ட பகுதியை 1:25,000 எனும் அளவுத்திட்டத்தில் வரைந்து அதனுள் பிரதான வீதியைக் கீறிக் காட்டுக. (2 புள்ளிகள்)

(b) மேலே வரையப்பட்ட அளவுத்திட்டமான 1:25,000 இற்கு நேர்கோட்டு அளவுத்திட்டத்தை வரைக (1 புள்ளிகள்)

iv. (a) இப் படப்பகுதியில் சதுரம் 1 இனுள் காணப்படும் இரண்டு சிறு குளங்களின் அணைக்கட்டுக்கள் நேரெதிரான திசைகளை நோக்கி அமைந்துள்ளன இதற்கான காரணம் **ஒன்று** தருக. (1 புள்ளிகள்)

(b) இடவிளக்கப்படத்தில் நெற்செய்கையின் பரம்பலைத் தீர்மானித்த **இரண்டு** காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

v. இவ் இடவிளக்கப் பகுதியில் காணப்படும் வீதி வலையமைப்புக்களின் பரம்பல் பாங்குகள் **இரண்டு** பற்றி விபரிக்குக.? (4 புள்ளிகள்)

vi. இவ் இடவிளக்கப் பகுதியில் காணப்படும் குடியிருப்புக் கோலம் ஒன்றைக் குறிப்பிட்டு அவற்றின் வளர்ச்சியில் செல்வாக்குச் செலுத்திய **இரண்டு** காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக? (4 புள்ளிகள்)

(2) உமக்குத் தரப்பட்ட உலகப் புறவுருவப் படத்தில் பொருத்தமான குறியீடுகள், மற்றும் நிறங்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக

i. கொங்கோ நதி

ii. பெங்குவலா நீரோட்டம்

iii. $80^0$ நெடுங்கோடு

iv. அப்பலாச்சியன் மலைத்தொடர்

v. பற்றக்கொனியா பாலைவனம்

vi. மிச்சிக்கன் ஏரி

vii. அனற்ரோலியன் மேட்டுநிலம்

viii. ஆசியாக் கண்டத்தில் அமைந்துள்ள மிகப்பெரிய உள்நாட்டுக் கடல்

ix. 2021 ஆம் ஆண்டு சர்வதேச ஒலிம்பிக் போட்டி நடைபெற்ற நகரம்.

x. “ஸ்புட்னிக் வி” என்ற Covid 19 நோய்க்கான தடுப்பூசியைக் கண்டுபிடித்த நாடு

(10 புள்ளிகள்)

## பகுதி III

(3)

i. பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமை என்றால் என்ன? (2 புள்ளிகள்)

ii. பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமையின் அவதானிப்பு நிலையங்களாக உள்ள இடங்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

iii. பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமையின் அடிப்படைப் பிரிவுகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக. (4 புள்ளிகள்)

iv. பூகோள இடைநிலைப்படுத்தல் முறைமையைப் பயன்படுத்தும் **மூன்று** துறைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

(4)

i. முதன் நிலைத்தரவு என்றால் என்ன என்பதை வரையறை செய்க. (2 புள்ளிகள்)

ii. தரவு சேகரிக்கும் முறைகளில் ஒன்றான வினாக்கொத்தின் முக்கியத்துவம் **மூன்று** தருக.(3 புள்ளிகள்)

iii. இரண்டாம் நிலைத் தரவு சேகரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் **நான்கு** முறைகளை இனம் காண்க. (4 புள்ளிகள்)

iv. முதன்நிலைத் தரவுக்கும், இரண்டாம் நிலைத் தரவுக்கும் இடையிலான வேறுபாடுகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

(5) இலங்கையின் மாவட்ட அடிப்படையிலான பிறப்புவீதம் - 2013 அட்டவணை 1 காட்டுகின்றது.

அட்டவணை 1

| மாவட்டம் | சராசரி பிறப்பு வீதம் | மாவட்டம் | சராசரி பிறப்பு வீதம் |
|---|---|---|---|
| கொழும்பு | 16.1 | முல்லைத்தீவு | 11.9 |
| ஹம்பகா | 14.6 | மட்டக்களப்பு | 20.0 |
| களுத்துறை | 15.8 | அம்பாறை | 22.6 |
| கண்டி | 19.6 | திருகோணமலை | 20.8 |
| மாத்தளை | 19.4 | குருணாகல் | 17.0 |
| நுவரேலியா | 20.5 | புத்தளம் | 21.1 |
| காலி | 17.1 | அநுராதபுரம் | 19.3 |
| மாத்தறை | 16.2 | பொலன்நறுவை | 18.6 |
| அம்பாந்தோட்டை | 20.7 | பதுளை | 18.7 |
| யாழ்ப்பாணம் | 17.3 | மொனராகலை | 19.6 |
| கிளிநொச்சி | 23.5 | இரத்தினபுரி | 18.5 |
| மன்னார் | 19.5 | கேகாலை | 16.3 |
| வவுனியா | 20.3 | | |

மூலம்:- சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம்

i. அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள 25 மாவட்டத் தரவுகளையும் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.

(a) இடை (3 புள்ளிகள்)

(b) இடையம் (2 புள்ளிகள்)

ii. அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள 25 மாவட்டத் தரவுகளையும் பயன்படுத்தி பிரிக்கை வரைபடம் ஒன்றினை அமைக்குக. (5 புள்ளிகள்)

iii. பிரிக்கை வரைபடத்தில் இருந்து காலணைகளை இனம்காண்க. (3 புள்ளிகள்)

iv. பிரிக்கை வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள பிறப்புவீதத்தில் காணப்படும் **ஒரு** முனைப்பான அம்சத்தினை விபரிக்குக. (2 புள்ளிகள்)

(6) அட்டவணை 2 இல் ஏற்றுமதியால் பிராந்திய ரீதியாக இலங்கைக்கு ஜனவரி மாதம் 2021 இல் கிடைத்த வருமானம் (US$) தரப்பட்டுள்ளது

அட்டவணை 2

| ஏற்றுமதி செய்த பிரதேசம் | கிடைத்த வருமானம்(US$) |
|---|---|
| ஐரோப்பிய ஒன்றியம் | 234.03 |
| தென்ஆசியா | 233.53 |
| ஆசியான் நாடுகள் | 81.58 |
| ஏனையவை | 60.90 |
| ஆபிரிக்கன் நாடுகள் | 21.04 |
| CIS நாடுகள் | 19.63 |
| மத்தியகிழக்கு நாடுகள் | 17.95 |

மூலம்:- இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை

i.. 2021 ஜனவரியில் இலங்கைக்கு ஏற்றுமதியால் கிடைத்த வருமானங்கள் பிராந்திய ரீதியாக தரப்பட்டுள்ளது இத் தரவினைப் பயன்படுத்தி எளிய பார் வரைபு **ஒன்றினை** வரைக. (இதற்காக தனியானதொரு வரைபுத்தாளைப் பெற்றுக்கொள்க) (6 புள்ளிகள்)

ii.மேலே அட்டவணை-2 ஐப் பயன்படுத்தி வரையப்பட்ட வரைபிலிருந்து இனம் காணப்பட்ட **இரண்டு** முனைப்பான அம்சங்களை சுருக்கமாக விபரிக்குக? (3 புள்ளிகள்)

iii.மேலே வரைந்த வரைபின் நன்மைகள் **இரண்டினை** விபரிக்குக? (3 புள்ளிகள்)

iv.அட்டவணை-2 இல் தரப்பட்ட தரவுகளை எடுத்துக் காட்டுவதற்கு பயன்படுத்தக்கூடிய வேறு ஒரு படவரைகலையியல் முறையினை முன்வைத்து அதன் பொருத்தப்பாட்டிற்கான காரணங்கள் **இரண்டினை** குறிப்பிட்டு விளக்குக? (3 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education – Northern Province

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) நிலையறி பரீட்சை - 2021
**General Certificate of Education (Adv – Level) Diagnostic Examination – 2021**

| | | |
|---|---|---|
| தரம் :- 13 (2021)<br>Grade :- 13 (2021) | புவியியல் I<br>Geography I | 22 \| T \| I |

வ




1:50,000

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
# Provincial Department of Education – Northern Province

## கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர) நிலையறி பரீட்சை - 2021
## General Certificate of Education (Adv – Level) Diagnostic Examination – 2021

| | | |
|---|---|---|
| தரம் :- 13 (2021)<br>Grade :- 13 (2021) | புவியியல் II<br>Geography II | நேரம் :- 3 மணித்தியாலம்<br>Time :- Three hours |
| சுட்டெண்:.............................. | 22 \| T \| I I | மேலதிக வாசிப்பு நேரம் :- 10 நிமிடம் |

**வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள்:**

- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்த பட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

### பகுதி I பௌதிகப் புவியியல்

1)

i. புவி அதிர்வு என்றால் என்ன என்பதை சுருக்கமாகக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

ii. கற்கோளத்தில் அமுக்கவிசைத் தொழிற்பாட்டினால் தோற்றம் பெறும் **மூன்று** மடிப்புக்களைக் குறிப்பிட்டு விளக்குக? (6 புள்ளிகள்)

iii. இழுவிசைத் தொழிற்பாட்டினால் தோற்றம் பெறும் **மூன்று** நிலவுருவங்களைப் பொருத்தமான வரைபடங்களுடன் விளக்குக? (6 புள்ளிகள்)

iv.புவிநடுக்கத்துடன் தொடர்புடைய **மூன்று** அனர்த்தங்களைக் குறிப்பிட்டு சுருக்கமாக விபரிக்குக. (6 புள்ளிகள்)

2)

i.உலகில் உள்ள பாலைவனங்கள் **நான்கின்** பெயர்களைத் தருக? (2 புள்ளிகள்)

ii.பாலைவனங்களில் நீரின் செயற்பாட்டினால் தோற்றம்பெறும் **மூன்று** படிதல் நிலவுருவங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

iii.காற்றினால் தோற்றுவிக்கப்படும் அரித்தல் செயன்முறைகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

iv.காற்றின் அரித்தல் செயன்முறையால் தோற்றுவிக்கப்பட்ட **மூன்று** நிலவுருவங்களைக் குறிப்பிட்டு அவற்றின் உருவாக்கச் செயன்முறை பற்றி விளக்குக (6 புள்ளிகள்)

3)

i.உயிரினக் கூட்டம் என்றால் என்ன என்பதை வரையறை செய்க. (2 புள்ளிகள்)

ii.உயிரினக் கூட்டங்களில் ஒன்றான அயனமண்டலமழைக்காடுகளின் முனைப்பான பண்புகள் **மூன்றினை** விளக்குக. (6 புள்ளிகள்)

iii.தற்காலத்தில் உயிர்ப் பெரும் திணிவுகள் எதிர்நோக்கும் சவால்கள் **மூன்றினை** உதாரணங்கள் மூலம் பரிசீலிக்குக. (6 புள்ளிகள்)

iv.இலங்கையின் சூழல் தொகுதிகளைப் பேணிப்பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் **மூன்று** நடவடிக்கைகளை விளக்குக. (6 புள்ளிகள்)

4)

i.காலநிலை மற்றும் காலநிலை மாற்றம் என்பவற்றை வேறுபடுத்துக. (2 புள்ளிகள்)

ii.காலநிலை மாற்றத்தில் செல்வாக்குச் செலுத்தும் **மூன்று** மானிடக்காரணிகளை விபரிக்குக. (6 புள்ளிகள்)

iii.காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் **மூன்று** விளைவுகளை விளக்குக. (6 புள்ளிகள்)

iv.காலநிலை மாற்றத்தின் தீவிரத்தன்மையை குறைத்துக் கொள்வதற்கு மனிதனால் மேற்கொள்ளக் கூடிய **மூன்று** நடவடிக்கைகளை விளக்குக. (6 புள்ளிகள்)

## பகுதி II மானிடப் புவியியல்

5)அட்டவணை – 1 இல் உலக சனத்தொகையின் சதவீதமும், வயதுப்பிரிவின் சதவீதமும் தரப்பட்டுள்ளது.

அட்டவணை – 1 உலக சனத்தொகையின் வயதுக்கட்டமைப்பு - 2020

| கண்டங்கள் | சனத்தொகை (%) | வயதுக் கட்டமைப்பு (%) | | |
|---|---|---|---|---|
| | | 15 வயதுக்கு கீழ் | 15—65வயது | 65வயதுக்கு மேல் |
| ஆசியா | 59.33 | 24 | 67 | 9 |
| ஆபிரிக்கா | 17.51 | 40 | 56 | 4 |
| லத்தீன் அமெரிக்கா | 8.37 | 24 | 67 | 9 |
| ஓசானியா | 0.56 | 23 | 64 | 13 |
| வடஅமெரிக்கா | 4.73 | 18 | 65 | 17 |
| ஐரோப்பா | 9.77 | 16 | 65 | 19 |
| உலகம் | 100 | 26 | 65 | 19 |

www.worldbank.org

i.சனத்தொகையின் பால், வயதுக் கட்டமைப்பில் பிறப்பு வீதம் மற்றும் இறப்பு வீதத்திற்கு ஏற்ப பிரமிட் (கூம்பு) வகைகள் **நான்கினைப்** பெயரிடுக. (2 புள்ளிகள்)

ii.அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள தரவுகளில் இருந்து இனங்காணக்கூடிய முனைப்பான அம்சங்கள் **நான்கினைக்** குறிப்பிடுக. (6 புள்ளிகள்)

iii.மேலே உம்மால் வயதுக்கட்டமைப்பு தொடர்பில் குறிப்பிட்ட முனைப்பான அம்சங்களுள் **இரண்டினைத்** தெரிவு செய்து அந்த ஒவ்வொரு அம்சத்துக்கும் பொறுப்பான **இரண்டு** காரணிகளைச் சுருக்கமாக ஆராய்க. (6 புள்ளிகள்)

iv.இலங்கையின் குடித்தொகையுடன் தொடர்புடைய **மூன்று** பிரச்சினைகளை விளக்குக. (6 புள்ளிகள்)

6)

i.நகரமயமாக்கம் என்றால் என்ன என்பதை குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii.நகரமயமாக்கல் செயன்முறையில் செல்வாக்குச்செலுத்தும் **மூன்று** பிரதான காரணிகளை விபரிக்குக. (6 புள்ளிகள்)

iii.இலங்கையின் நகரமயமாக்கல் சார்ந்த சமூக, பொருளாதார, சூழல் பிரச்சினைகள் **ஒவ்வொன்றைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

iv.மேலே வினா iii இல் குறிப்பிட்ட பிரச்சினைக்கான தீர்வுகள் **ஒவ்வொன்றை** முறையே குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

7)

i.உற்பத்திக் கைத்தொழிலை ஓரிடப்படுத்தும் பௌதீக மூலதனத்துக்கு **நான்கு** எடுத்துக்காட்டுக்கள் தருக. (2 புள்ளி கள்)

ii.கைத்தொழில் அமைவிடக்காரணிகளின் அண்மைக்காலப் போக்குகள் **மூன்றைக்** குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

iii.இலங்கையின் சீமெந்துக் கைத்தொழில்களை ஓரிடப்படுத்துவதில் செல்வாக்குச் செலுத்திய **மூன்று** காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

iv.இலங்கைப் பொருளாதாரத்துக்கு கைத்தொழில்துறையின் பங்களிப்பினை **மூன்று** காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளிகள்)

8)

i.பூகோளமயமாக்கல் செயன்முறை நடைபெறும் **நான்கு** துறைகளையும் தருக. (2 புள்ளிகள்)

ii.பூகோளமயமாக்கலினால் பெற்றுக் கொள்ளக்கூடிய **மூன்று** நன்மைகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளிகள்)

iii.பூகோளமயமாக்கல் செயன்முறையை விரைவுபடுத்துவதில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பங்களிப்பினை **மூன்று** விடயங்களின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளிகள்)

iv.இலங்கையின்மீது பூகோளமயமாக்கத்தின் தாக்கத்தினை **மூன்று** உதாரணங்களுடன் விபரிக்குக. (6 புள்ளிகள்)